புத்தகம் கரு] உ [ஸஞ்சிகை உகூ

ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ஆயிரம்கோடி திரவியம் கொடுத்தாலும் அரைக்ஷணமேனுமாயுள் கிடைப்பது மிகவரிதென்று நினைத்து நம்முன்னோர்கள் நொடிப்பொழுதையும் வீணாகக்கழிக்காமல் வேதமோதுவதிலும் யாகம் செய்வதிலும் சக்திக்கேற்றவாறு கொடுப்பதிலும் முயற்சித்தும் தவம்புரிந்தும் தியானம் செய்தும் எவ்விதத்திலேனும் காலம் ஸபலமாகும்படி கழித்துவந்தார்கள். அத்தகைய காரியங்கள் தற்காலத்திலும் இல்லாமல் போய்விடவில்லை. அவைகளை உபதேசிக்க ஆசிரியர்களும் கிடைக்காமலில்லை. அவைகளுக்கு முன்னிருந்த பிரமாணங்கள் அழிந்துபோகவில்லை. ஆயினும் தற்போது பிராணிகள் குறுகிய காலத்திற்கிடைத்த ஆயுளைக் கண்டபடி கழித்துவருகிறார்கள். சூதாடுவதிலும், சீட்டாடுவதிலும், பந்தாடுவதிலும் இவை போன்ற உபயோகமற்ற பல காரியத்தில் காலத்தைக் கழிக்கிறார்கள். சிலர் பொழுதுபோக வழியில்லையே என்று கவலைப்படுகின்றனர். சிலர் பெரிய பெரிய காரியங்களில் தலையிட்டு சிரமப்படுவதாக அபினயித்து பரலோகஹிதமில்லாத விஷயங்களில் வீண்பாடு படுகிறார்கள். வேதங்களில் விதிக்கப்படாதவைகளும் சுக்கிரநீதி காமந்தகநீதி சாணக்கியநீதிமுதலிய நீதிசாஸ்திரங்களில் நியமிக்கப்படாதவைகளும் பாரதநாட்டைப் பகைவரற்று ஆண்டுவந்த க்ஷத்திரியவீரர்கள் கண்டுபிடித்துக் கையாளாதவைகளுமான கார்யங்களில் பலர் பாடுபடுகிறார்கள். இப்படி ஒருவராலும் கண்டுபிடிக்கப்படாத விஷயத்தில் புகுவதே பெரிய புகழென்றும் நினைப்பார்கள்போலும். ஆத்துமாவை நித்தியமாக ஒப்புக்கொண்டால் செத்தும் ஜனித்தும் பசிதாஹத்தால் துயரப்பட்டும் சிரமப்படுவதிலிருந்து விலகி நித்தியசுகம் பெறமுயற்சிப்பதே சிலாக்கியமான கார்யமாகும். ஆத்துமா அநித்தியமென்ற பக்ஷத்தையவலம்பித்தாலும் இந்த ஜன்மத்திலேயே பயன் பெறக்கூடாத காரியங்களிலீடுபட்டுக் கஷ்டப்படுவது யாருக்காகவோ தெரியவில்லை. பொதுநலத்திற்காகவெனில் தன்னைப் பெற்று வளர்த்துக் கஷ்டப்பட்ட தாய் தந்தையர்களைப் பரக்கவிட்டவர்களா பொதுஜனங்களுக்கு உழைக்கப்போகிறார்கள்? அப்படி பொதுநலத்திற்கு உழைக்கும் தியாகசீலர்கள் தற்காலம் தன் கைவசமாயிருக்கும் பொருள்களைப் பிரித்துப் பலபேர்களுக்குப் பங்கிட்டுக்கொடுப்பார்களா? பொதுநலத்திற்குழைப்பதென்ற வியாஜத்தால் சுயநலத்தையே பெரிதாகப் பாராட்டுவதாக முடிகிறதேயன்றி வேறொன்றுமில்லை. இப்படியிருக்கையில் தற்காலத்திய நாகரீகம் பெருத்தவிடத்திலிருப்பவர்கள் சாஸ்திரோக்தமே சரியான வழியென்று நம்பியிருக்கின்றவர்களைச் சுயநலம் கருதியவர்களாகக் கூசாமல் கூறுகின்றனர். இதில் எவர் சுயநலம் கருதியவரென்பது தெரிந்தவர்களுக்குத் தோன்றாமலிருக்காது. இவ்விதமாக பரஸ்பரம் தூஷித்துக்கொண்டு பயனற்ற கார்யத்தில் பிரவிர்த்திப்பதைவிட பிறரை தூஷிக்காமலிருப்பதே பெரிய கார்யமாகும். பரோபகாரம் செய்யினும் செய்யாவிடினும் அபகாரம் செய்யாமலிருப்பதே பெருத்த நன்கொடையாகுமென்ற சாஸ்திரஸித்தாந்தத்தையனுஸரித்து யாவரும் எவரையும் நிந்திக்காமல் தன்னைப்போலவே பாவித்துப் பரமசுகத்தை அனுபவிப்பார்களாக.

சுபம்

பத்திராதிபர்.

39

உ

ஆர்ய தர்மம்.

பிரமோத-௵ ஆடி-௴ ௧௨

லோகாந்தரம்.

(281-வது பக்கத்தொடர்ச்சி.)

லோகாந்தரமுண்டாவென்ற ஸந்தேஹம் வந்தால் அதைத் தீர்க்கப் பண்டிதர்களாலும் முடியாமலிருக்கப் பாமரர்களா ஐயமறத்தீர்மானம் சொல்லுவார்கள். பாமரர்களுக்குப் பரலோகமுண்டென்ற நினைப்பேகிடையாது. அவர்களது தீர்மானம் இவ்வுலகத்தோடு நின்றுவிட்டதேயன்றி மேலெட்டவில்லை. "இந்தலோகந்தானுள்ளது, பரலோகமேயில்லை, என்று அபிமானப்பட்டவனெல்லாம் அடிக்கடி எனக்கு வசமாய்விடுவான்" என்றயமதர்மராஜனின் வசனத்தால் இக்கருத்து வெளியாகிறது. சிலருக்குப்பரலோக நம்பிக்கை ஒருவாறிருப்பினும் அது திடமாயிருப்பதில்லை. வாஜசிரவஸ் என்ற மஹரிஷியின் புத்திரரான நசிகேதஸ் என்பவருக்குப் பரலோகமுண்டென்ற நம்பிக்கையிருந்தும் யமதர்மராஜாவிடம் சென்று இச்சபதத்தையே கேட்டு முன்னிருந்த நம்பிக்கையை திடப்படுத்திக்கொண்டு ஸ்வர்க்காதி லோகாந்தரப் பிராப்திஸாதநங்களான அக்னிவித்யை முதலியவைகளைத் தெரிந்துகொண்டதோடு கடைசியாக ஆத்மவித்யையும் அடைந்து முக்தியடைந்தார். தர்மபுத்திரரும் பீஷ்மாசாரியாரிடமிருந்து தர்மதத்துவத்தையுபதேசத்தால் தெரிந்துகொண்டு தர்மவழியிலேயே நடந்து சிரேயஸ்ஸையடைந்தார், தற்காலத்தியவர்களுக்கு அந்தபாக்கியம் கிடையாதென்று தர்மராஜனும் பீஷ்மாசாரியரும் சொல்லவில்லை. கலியில் ஜனித்தவர்களும் நசிகேதஸ்ஸைப்போல் அருந்தவம் புரிந்து மோக்ஷமார்க்கத்தில் ஈடு படுவார்களானால் பரமபுருஷார்த்தத்தையும் அடையலாம், என்று தான் கூறியிருக்கின்றார்கள். மனிதர்நோக்கப்படியெல்லாம்நடக்காமலிருப்பதால் தன்னுடைய கோரிக்கை தடை பட்டதற்குக்காரணம்தன்னிடத்திலேயே இருப்

பதாக புத்திமானுயிருப்பவன் ஊஹித்துத்தெரிந்துகொள்ளலாம். இதுபோல் ஒரு ஸமயம் தன்னிஷ்டப்படி நடந்துவிடுவதிலிருந்து அதன் காரணத்தையுமூஹித்தறியலாம், அவைகளுக்குத்தான் சாஸ்திரங்களில் பாபம் புண்ணியமென்று பெயரிடப்பட்டிருக்கின்றது. வேலையைப்பார்த்து கூலிகொடுக்கும் பிரபுப்போல் புண்ணிய பாபங்களுக்கேற்றவாறு அததன்பரிபாககாலத்தில் பயனையளிப்பவரொருவரிருப்பதாக புத்திமானுக்குப் புலப்படலாம், அவரைத்தான் பரமேசுவரனென்றுசாஸ்திரம் போதிக்கின்றது. முன்ஜன்மத்தில் செய்த கர்மாவின் பயன் பின் ஜன்மத்தில் அவசியமனுபவித்தே தீரவேண்டியதாகையால் ஜன்மந்தரமு (மறுபிறப்பு) ம் ஸித்திக்கின்றது. நல்லது பலன் கைகூடும்போது ஜன்மாந்தர பாக்யத்தால் அதுநேர்ந்ததாக புத்திமானுக்குப் போலப்பாமானுக்குத் தோன்றுவிடினும் கெட்ட பலன் நேரும்போது தோன்றுமல் போகாது. வயிற்றுவலி, வாந்திபேதி முதலிய கொடியநோய் வரவேணுமென்று எவனும் வேண்டிக்கொள்ளமாட்டான். ஒருவாறு அவை நேர்ந்துவிடினும் அவைகளைப் போக்கத் தகுந்த வைத்தியனை வரவழைத்து நல்ல மருந்து சாப்பிட்டு வேண்டிய பாடுபடுவார்கள். சிலருக்குத்தான் ஆரோக்கியமுண்டாகின்றது. சிலருக்குவியாதி தீருவதேஇல்லை. இதன்காரணத்தை ஆராய்ந்து பார்க்கும்பொழுது வைத்தியநூல்களில் புண்ணியபாபங்கள்தான் காரணங்களென நிரூபிக்கின்றது. எல்லோருக்கும் பொதுவான வைத்தியநூல்கள் இவ்விதம் நிரூபிப்பதிலிருந்து இதைஉண்மையென்றே யாவரும் அங்கீகரிக்கவேண்டியது. ஆகவே ஸர்வேசுவரனுகிய் பரமேசுவரன் கட்டளைப்படி நடக்கக்கடமைப்பட்ட ஜீவராசிகள் அவரது ஆக்ஞைக்கு மீறிநடந்தால் அவரது கோபத்திற்குத்தானுளாவார்களேயன்றி அவரது பிரஸாதத்திற்குப் பாத்திரமாகமாட்டார்கள், அதனுல் அவரது ஆக்ஞைப்படி யாவரும் வர்ணுசிரமதர்மத்தைக்கைப்பற்றி க்ஷேமத்தையடைவார்களாக!

சுபம்!

பத்திராதிபர்.

தேசாந்தரீயப் படிப்புத்தான் எல்லா அனர்த்தத்திற்கும் மூலம்.

(290-வது பக்கத்தொடர்ச்சி.)

பிறகு பல்துலக்குவதற்கும் ப்ருஷ் என்பதையும் தேசாந்தரத்தவர்கள் தயார்செய்த பொடி முதலியவைகளைத்தான் உபயோகிக்கிறார்கள். ப்ருஷ் என்பது என்ன? தொடத்தகாத கழுதை பன்றிமுதலியவைகளின் உரோமத்தால்செய்யப்பட்டது. அதைத்தான் வாயிலிட்டு சுத்திசெய்கிறதாம். பிறகு குளிப்பதற்கு வஸை மேதஸ் மஜ்ஜைமுதலிய மிருகங்களின் அசுத்தசாமானால் செய்யப்பட்ட ஸோப் என்பதைத் தேய்த்துக்கொண்டுதான் குளிக்கிறார்கள். மலமூத்திரங்களைக் கழிப்பதற்கு அத்தேசத்தில் செய்யப்பட்ட பல வர்ணமுள்ள இரும்புஸாமான்களை வாங்குகின்றனர். வளர்ப்பானேன், தாகத்திற்குக் குடிப்பதற்கும் அவர்கள் தயார் செய்யும் ஸோடாவாடர் முதலியவைதான் வேண்டுமாம். இதற்கும் செலவு. தூமபானம் செய்கிறவர்களுக்குமதற்காக அவர்கள் தயாரித்த புகைச்சுருட்டு ஸிகரெட் முதலியவை ஆவ்சியகம். இச்சிகரெட் முதலிய கெட்டபழக்கத்தால் நம் தேசத்தைவிட்டுப் போகும் பணம் 16கோடி ரூபாய். இவ்விதம் பல வழிகளிருக்கின்றன. இவர்கள் செய்யும் கார்யங்கள் நம் தேசத்திற்கு தாழ்மையையும் அன்யதேசத்திற்கு ஆக்கத்தையுமளிக்கின்றன. ஆதல் பற்றியே கற்றவர்களும் கற்பிக்கப்படுகின்றவர்களும் மேற்றிசையோரிடம் நெருங்கின ஸ்னேகமுள்ளவர்களாய் ஆகின்றனர். எவ்விதம் அதிகாரிகளால் இவர்களது மனதை இழுக்க வித்யாலயங்கள் ஏற்படுத்தப்படுகின்றனவோ அவ்விதமே படிக்கும் புத்தகங்களும் ஆங்கிலத்திலேயே மனதை இழுக்கும்படி இயற்றப்படுகின்றன. இவ்வளவு பிரயத்தனத்திற்கும் உத்தேசம் மேற்றிசையாரின் மகிமையை வளரச்செய்ய பாரதீயர்களைத் தயார்செய்வதே. லோகாபவாதத்தை விலக்குவதற்காகவே அவர்களால் நம் தேச வித்தையைக் கற்பிக்க ஏதோ இரண்டோரிடத்தில் ஸம்ஸ்கிருத வித்யாலயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அங்கும் ஆங்கிலநியமமே அதிகமாய்க்கலந்து நம்ஸம்ஸ்கிருதத்தை இஷ்டம் போல் வளரவிடாமல் செய்துகொண்டிருப்பதை விசாரிக்கப்புகின்

துக்ககரமாய் இருக்கும். இச்சமயம் நம் தேசத்தில் பணம் உள்ள நகரத்துச் செட்டிமார்கள் முன்வராமலிருந்தால் நம் வேதமும் சாஸ்திரமும் இருந்தவிடம் தெரியாமற் போயிருக்குமென்பதில் சந்தேகம் உண்டோ? இல்லை. ஆங்காங்கு பாடல்பெற்ற ஜீர்ணமான் ஆலயங்களைக்கட்டியும் அங்கு வேதசாஸ்திரபாடசாலை ஸ்தாபித்து நம் மாணாக்கர்களுக்கு விசாரமின்றி அன்னவஸ்திரமும் மற்றுமுள்ள சௌகர்யங்களையும் வைத்து வீட்டைக்காட்டிலும் பன்மடங்கு அதிக சௌகர்யம் செய்து ஏராளமாய்ப் பாடசாலைகளை ஸ்தாபித்தார்கள். அத்தகைய பாடசாலைகள் இப்போதுமிருக்கின்றன. ஆனால் இவைகளில் சுகமாய்ச்சேர்ந்து படிக்க நம் பிராமணப்பையன்கள் கிடைக்காமல் மூடநேர்கிறது காரணம் யாது? இப்படிப்பால் பிரயோஜனம் இல்லையென்று யாவருக்கும் எண்ணம் உண்டாய்விட்டது. அது உண்மையே இல்லை. மேற்றிசைப்படிப்பின் மயக்கமொன்றுதான் காரணம். இதைப் பின்னால் கவனிப்பாம். இம்மேற்றிசைப்படிப்பின்மயக்கத்தைப்பெற்று முன்வந்தவர்கள்தான் தற்காலம் லோகமுன்னேற்றத்திற்குப்பாடுபடுகிறார்கள். இவர்கள் நம் பாரதமாதாவென்று அர்த்தமில்லாத வசனத்தைக் கதறிக்கொண்டு நம் தேசநன்மை இன்னதென்று தெரியாமல் தானுங்கெட்டு ஸாதுக்களையும் தேசத்தையுங்கெடுத்து விடுவார்களென்பதை சற்று கவனிப்பாம்.

இவர்கள் ஆங்கிலம் க்ற்க ஆரம்பித்ததும் முற்கூறியவாறு காலையில் எழுந்திருந்து பல் துல்க்கஆரம்பித்தால் அவர்களுக்கு பொடி ப்ருஷ் முதலியன வேண்டும். பிறகு முகம்கழுவ அவர்கள் செய்த ஸோப் வேண்டும். பிறகு அவர்கள் உபதேசித்து தேகத்தைக் கெடுக்கச்செய்த காபீ; டீ, கோகோ, ஓவல்டின் முதலிய பானம் செய்யவேண்டும். அத்துடன் ரொட்டி வேண்டும். இம்மாணாக்கர்கள் தன்னூரைவிட்டுப்பட்டணங்களிலிருக்கிற காலேஜ்களில்சேர்ந்து அங்கு ஏற்பட்ட ஹாஸ்டல்களிலோ அல்லது காபிகிளப்புகளிலோ சாப்பிடுவார்கள். அங்கிருக்கும் ஆசாரம் நம் தேசத்திற்கும் சாஸ்திரத்திற்கும் பரமவிரோதமாய் இருக்குமென்பதைச் சொல்லவேண்டாம். இப் படிப்பால் டாக்டர் என்று பெயர்பெற்ற யாராவது இவ்விடங்களைப் பார்த்து உண்மையாய் இது ஆரோக்கியத்தைக் கொடுக்குமென்று துணிந்துகூற முன்வரக்கூடுமாவென்பதைக் கவனிக்கவேண்டும். இதிருக்கட்டும்.

இனி அத்புதமான வேறு விஷயத்தைப்பார்த்து அகமகிழ்வோம். இப்போது நம் குழந்தைகள் ஒவ்வொருவனும் தவருமல் சோப், கண்ணுடி, க்ஷவரக்கத்தி இவ்வளவும் தனித்தனியே வைத்திருப்பது விசேஷம். ஏனெனில் ஒருவன் கத்தி இன்னெருவன் உபயோகப்படுத்தினுல் வியாதிவந்துவிடுமாம். இக்கத்தியை வைத்துக்கொண்டு ஆனந்தமாய் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு முகத்தைச் சுத்தம்செய்துகொள்வார்கள். இதற்கு ஏற்பட்ட கத்தி நம் மேற்றிசையாருடையது. பிறகு நாம் மந்திரத்துடன் வைத்த தலையை மொட்டையடித்து மேற்றிசைக்குடுமியை வைத்துக்கொண்டு அதற்கு வாசனை எண்ணெய் போட்டு மேற்றிசையாரால் செய்யப்பட்ட எலும்புச் சீப்பைக்கொண்டு வாரிவளை கட்டி மயிரை வளைத்துவிடுவார்கள். இதற்கு சுமார் 1-மணி நேரம் போய்விடும். இவ்விடையில் வேதியக்குழந்தைகளுக்கு ஏராளமாய் செலவுசெய்து போட்ட பூணூலுக்குப் பிரயோசனமான சந்தியாவந்தனகர்மா நடக்குமோவென்று சந்தேகம் கொள்ளவேண்டுமோ? வேண்டாம், பிறகு காலைவேளை போஜனத்திற்கு இறங்குவார்கள். ஸ்னானம்செய்ய ஸோப்எடுத்துக்கொண்டு போய் ஆசாரமென்பதை மறந்துவிட்டு ஸ்னானம் செய்வார்கள். அதன்மகிமையில் இறங்கினுல் வெகுதூரம் இழுத்துக்கொண்டு போய்விடும். ஆகவே அவ்வழி வேண்டாம்.

பிறகு வியவஸ்தை இன்றிப் புசித்துச் சட்டை அணிந்து பள்ளிபோவார்கள். அங்கு படிப்பதும் கற்பிப்பதும் ஆச்சர்யம். ரோமன்ஹிஸ்டரி ப்ரென்ச் ரெவல்யூஷன் இன்னும்சொல்லவொண்ணுப்பாடங்களுண்டு. அதில் புத்தியைக் கூர்மையாய்ச் செலுத்தி படிக்கவேண்டும். இவ்விதம் தேசாந்தர சரித்திரத்தைத் தான் படிக்கவேண்டும். அங்கிருந்த மேதாவிகளின் ஜீவிய சரித்திரம் ஆங்கிலபாஷையில் அழகாய் எழுதப்பட்டிருக்கும். அச்சொல்வன்மையிலும் கதாஸாரத்திலும் ஈடுபட்டு புத்தி தன்மயமாய் ஆகும். நம் தேசசரித்திரமும் பாடமுண்டு. அது நம் கண்ணைத்துடைப்பதற்குப்போல் ஏற்பட்டது. உண்மையில் நம் சரித்திரம் ஒன்றுமில்லை. நம் தேசத்தில் வீரபுருஷர்கள் பிறந்திருக்கவில்லையா? கவிச்ரேஷ்டர்கள் உதிக்கவில்லையா? அவர்கள் புத்தகம் கிடையாதா? மகம்மதியர்கள் படையெடுத்து ஆண்டு செங்கோல் செலுத்தியதையும் பிறகு தாங்கள் வந்து கௌரவமாய் நம்மை

ஆள்வதையும் தான் இந்துதேசசரித்திரம் கூறுகின்றது. இருக்கட்டும். இங்கு இவர்கள் கற்கும் முறையை கவனியுங்கள். உபாத்தியாயர் சீடன் என்ற வரம்பு காணப்படாது. உபாத்தியாயர் நாற்காலியில் உட்காருவார். இவர்களும் ஸமமான ஆஸனத்தில் அமர்வார்கள். உபாத்தியாயர் பாடம் சொல்லும்போது கை நகத்தைக் கடித்துக்கொண்டிருப்பார். மாணுக்கர்களும் ஒருவர் தவறுமல் அவ்வேலையைச் செய்வார்கள். உபாத்தியாயர் அமைதியாய்ப்பேசுவார். பையன்கள் உத்தண்டமாய் மரியாதையின்றி பேசுவார்கள். இவ்விதம் என்னவோ படிப்பைப் படித்துவிட்டு பாடசாலை கலைந்தது. மாணுக்கர்கள் கால்பந்து கைபந்து அடிக்கப்புறப்பட்டுவிடுவார்கள். அதற்குவேண்டிய சாமான்களிவை. கைப்பந்தடிக்க பசுமாட்டின்நரம்புகளால் கட்டப்பட்ட Bat எடுப்பார்கள். இதற்கு இவர்களணியும் சட்டைதினுசுகள் மேற்றிசையாரின் மாதிரிதான். தாழ்ந்த வெய்யிலில் ஆரம்பித்து இருட்டின் பிறகுதான் வீடு நோக்குவார்கள். அந்திப்பொழுதுக்கேற்பட்ட நித்தியகன்மம் இதுதான். இனி இவர்கள் படிக்கும் புத்தகங்களின் மகிமையை கவனிக்கவேண்டும். கீழ்வகுப்புப்பாட புத்தகம் முதல் உயர்ந்த படிப்பு முடியுமட்டும் இங்கிலீஷ் முதலிய ஸமஸ்த புத்தகங்களும் மேற்றிசையில் அச்சியற்றப்பட்டவை, அன்னவர்களால் விற்பனைக்கு அனுப்பப்படுபவை. அப்புத்தகங்களை விற்பதற்குக் கமிஷன் மட்டிலும் நம்மவருக்குச்சேரும். ஒரு வகுப்பில் ஒருவருடம் வைத்த பாடபுத்தகம் இன்னொரு வருடத்துக்குதவாது. அதுமட்டுமல்ல. அடுத்த வருடத்தில் அதே வகுப்பில் சேரும் மாணவர்களுக்காவது அது உபயோகப்படலாமோ, கூடாது. ஒவ்வொரு வருடத்துக்கு ஒவ்வொரு வகுப்புக்கும் புதிதுபுதிதாய்த்தான் புத்தகங்கள் ஏற்படும். ஆகவே ஒரு வருடம் வாங்குகிற புத்தகத்தை அம்மாணுக்கன் அவ்வருட முடிவுக்குள்ளேயே கிழித்தும் கசக்கியும் அழுக்காகவும் செய்துவிடுவான். அவ்விதம் மிஞ்சின புத்தகம் குப்பைத் தொட்டிக்குத்தான். இவ்விதம் மேற்றிசையார் வியாபாரஸூக்ஷ்மம் என்ன அழகு என்பதை கவனிக்கவேண்டும். இனி இவர்களுக்கு மாதச் சம்பளம் என்ன ஆகிறது. வீணுய் வளர்ப்பானேன். ஒரு மாணுக்கன் B.A., B.L., வகுப்பு முடியப்படித்து வெளிவர சுமார் 4000 ரூ ஆகிறது. இதைக் கூட்டிப்பார்த்தால் எத்துணைகோடி ரூபாய்

நம் இந்தியர்கள் செலவு செய்கின்றனர். இதில் நம் தேசத்தவர்களுக்கு உபயோகப்படுவது 4ல் ஒரு பங்கு சந்தேகம் தான். மற்ற மூன்று பங்குகள் எங்கு போய்ச்சேருகின்றனவென்பதை ஊன்றி கவனிக்கவேண்டும். இவ்விதம் செலவு மட்டிலும் நிச்சயம். இதற்குத் தகுந்த பலன் உண்டாஎன்பது ஆராயப்படவேண்டும். எண்ணெய்ச் செலவு தான் பிள்ளைபிழைக்க வழியில்லை என்ற கதைபோல் நம் பணத்தை வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி படிப்புக்கென்று இறைத்துவிட்டு ஏராளப்படிப்பையும் படித்துவிட்டு வேலையில்லாமலும் வேறுவழியில் பிழைக்க வழிதெரியாமலும் தவிப்பதைக் காண்கின்றோம். இவ்வளவு கூற இங்கு என்ன ஸந்தர்ப்பமென்பதை இங்கு கவனிக்கலாம். இவ்விதம் சிறு வயது முதற்கொண்டு மேற்றிசை நாகரீகத்தால் நம் தேசவாசனையற்று மதவாசனை தொலைந்து குலப் பழக்கத்தை அறவேயொழித்துப் பாஷண்டனைப் எங்கு கண்டாலும நியமமற்றுப் புசித்தும் மேற்றிசையார்போல் எப்போதும் சட்டையையும் தட்டுச் சுருக்கு வஸ்திரத்தையும் உடுத்தி அலைகின்ற இவர்கள் நம் இந்தியாமுன்னுக்கு வரவேண்டுமென்று பாடுபட்டால் இவர்களுக்கு இந்தியாவின் ஸ்வரூபம் இன்னதென்று தெரியுமா ? நம் இந்தியா முன்காலத்தில் எவ்விதம் இருந்ததென்பதும் எதனால் அக்காலம் செழிப்புற்றோங்கியிருந்ததென்றும் எது முன் இருந்தது இப்போது இல்லையென்றும் அறிய வழி தெரியுமா ? தெரிய வழியே இல்லை. அது அவர்கள்பேரில் குற்றமில்லை. அதனால் தற்காலத்தில் அத்தகையோர் ஸ்வயராஜ்யமென்று கூச்சலிட்டு முன்னுக்கு வருகிறபடி ஸ்வாராஜ்யம் கிடைத்தால் அது இந்தியஸ்வாராஜ்யமாய் இராது. ஐரோப்பியஸ்வாராஜ்யம் தான் என்பதை விளக்கப் பின்னால் வருகிறேன். இனி நம் தேசப்படிப்பைப்பற்றியும் அவர்கள் தான் உண்மை இந்தியர்களென்றும் அவர்கள் கோரும் ஸ்வாராஜ்யம் தான் இந்திய ஸ்வாராஜ்யமென்றும் அடுத்துவரைகிறேன்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

சிராத்தத்தில் சிலரது ஆசங்கை.

(294-வது பக்கத்தொடர்ச்சி.)

(5) மேலே சொல்லப்பட்ட வடதேசத்துப் பிராமணர் புராணத்தை நம்பவில்லை. புராணம் வேதத்திற்கு விரோதமாகவும் இயற்கைக்கு விரோதமாகவும் சுயநலத்தைக் கருதிய சொற்ப காலத்திற்கு முந்திஇருந்த பிராமணர்கள் முனிவர்களுடையபெயரை வைத்து புராணங்களை யெழுதியதாகவும் நிச்சயமாகக் கூறுகிறார். மேலும் புராணங்களையும் கீழேசொல்லப்பட்ட வேதவாக்கியங்களையும் மற்றுபிரமாணவாக்கியங்களையும் நோக்கும்போது புராணங்கள் பொய்யன்றே நம்பவேண்டியிருக்கிறது. இதில் மஹாபலேசுவாசர்மாவின் புராணத்தைப்பற்றிய அபிப்ராயத்தை பின்வருமாறு காண்க, அதில்வேதம் ஈசுவரனுடையவாக்கியம். அநாதி காலம் முதலிருந்து வருகிறது. புராணங்களோவெனில் 'ஸிருஷ்டிக்குப்பிறகு ஆயிரம் வருஷத்திற்குள்ளாகவே மனுஷ்யர்களால் எழுதப்பட்டன. இந்த உண்மை "பதினெட்டுப் புராணங்களை எழுதியவர் பாராசருடைய புத்திரராகியவியாஸர்" என்ற புராண வசனத்திலிருந்தே தெரியவருகிறது.

"अष्टादशपुराणानां कर्तासत्यवतीसुतः" என்ற வசனம் எதுவரை உண்மையென்று அறியவேண்டியது அவசியமாகிறது. எந்த வியாஸர் இந்த பதினெட்டுப்புராணங்களுக்குக் கர்த்தாவோ அவர் தர்மபுத்திரருடைய காலத்தில் இருந்ததாகத் தெரியவருகிறது. இதை எல்லாபுத்திமான்களும் வித்வான்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அன்றியும் இந்த புராணங்கள் யாவும் மகாபாரதத்திற்குப் பிறகுதான் உண்டுபண்ணப்பட்டனவென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் விஷயமே.

அல்லாமலும்— பாகவதத்தை சுகதேவமுனியானவர் பரீக்ஷித்து மகாராஜனுக்குச் சொன்னதாக எல்லோரும் நம்புகிறார்கள். ஆனால் இந்துதேச சரித்திரத்திலிருந்து என்ன தெரியவருகிறதென்றால்— பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் யுத்தமான பிறகு விஜயத்தையடைந்த யுதிஷ்டிரர் ஸிம்ஹாஸனத்தின் மீது வீற்றிருந்து 36 வருஷமும் 25 தினங்களும் ராஜ்யம் ஆண்டார். அவருக்குப் பிறகு பரீக்ஷித்து மகாராஜன் ஸிம்ஹாஸன

மேறி, 60, வருஷம் அரசாண்டார். பாகவதத்தில் பரீக்ஷித்து மகாராஜாவின் கடைசி காலத்தில் சுகதேவமுனி பாகவதம் சொன்னதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது இப்படியிருக்க மகாபாரதம் சாந்திபர்வம் அத்தியாயம், 322—323-லிருந்து என்ன தெரியவருகிறதென்றால்—யுத்தம் முடிந்த பிறகு யுதிஷ்டிரர் பீஷ்மரிடம் உபதேசம் கேட்கப்போனபோது யுதிஷ்டிரர்சுகதேவரைப் பற்றி கேழ்க்கும்போது பீஷ்மர் வெகுகாலத்திற்கு முன்னமேயே அவருடைய காலம் ஆய்விட்டதென்று தெரிவிக்கிறதாகக் காணப்படுகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால்— யுதிஷ்டிரர் கூட சுகமுனியைப் பார்க்கவில்லையென்றால் அவரிடம் பரீக்ஷித்து மகாராஜன் பாகவதம் கேட்டிருப்பதாகக் கூறுவது எந்தவிதம் பொருந்தும். இது எவ்விதமான அசத்தியவாக்கென்று பாருங்கள். இதிலிருந்து என்னவிளக்கமாகிறதென்றால், சுகமுனி பரீக்ஷித்து மகாராஜனுக்கு பாகவதத்தைச் சொல்லவுமில்லை. இந்த புராணத்தை வியாஸபகவான் உண்டுபண்ணவுமில்லையென்று நிச்சயமாகத் தெரிகிறது. இதுபோலவே பிரம்மாண்ட புராணம் பத்துமபுராணம் இவைகள் 300 வருஷத்திற்குள்ளேயே எழுதப்பட்டதென்று கிழ்க்கண்ட பிரமாணங்களிலிருந்து தெரியவருகிறது. அதாவது பிரம்மாண்டபுராணத்தில்

प्राप्ते कलियुगे घोरे सर्वे वर्णाश्रमेतराः ।
तमाखुर्भक्षितो येन स गच्छेन्नरकार्णवे ॥

"கோரமானகலியுகம்பிராப்தமாகும்பொழுதுஎல்லோரும்வர்ணாசிரமத்தினின்றும் வேறுபட்டவராவார்கள். தமாகுவை(புகையிலையை) பக்ஷித்தவன் நரகத்தையடைவான்" என்ற வசனத்தில் 'தமாகு' என்ற சப்தம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்த சப்தம் அமெரிக்காபாஷையின்சப்தம். இதுவேறுகிரந்தங்களிலும், தர்மசாஸ்திரங்களிலும் காணப்படவில்லை. ஆனால் மிலேச்சர்களாகிய துலுக்கர்கள் இந்து தேசத்தை ஆள்வதற்குப்படையெடுத்துவருகையில் ஔரங்கஜீப், அக்பர் காலத்திற்தான் இதை உபயோகிக்கக் கூடாதென்று குருகோவிந்தஸிங் பிரசாரம் செய்ததாகவும் தெரிகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால்— பத்துமபுராணம், பிரமாண்டபுராணம் இவ்விரண்டும்அக்பர்ராஜ்யாதிபத்யம்அடைந்த பிறகுதான் எழுதப்பட்டனவென்றும் தெரியவருகிறது. இவ்விதம் புதிதாக எவராலேயோ எழுதப்பட்டவைகளை வியாஸபகவான்

செய்தானெனச் சொல்வது எவ்வளவு தப்பான வார்த்தைபாருங்கள். பத்மபுராணம் 22:வது அத்தியாயத்தில்— धूमपानरतं विप्रम् என்ற வசனத்தில் தூமபானம் கூறப்படுவதும் இப்படித்தான்.

(6) योऽनधीत्य द्विजो वेदमन्यत्र कुरुते श्रमम् ।
स जीवन्नेव शूद्रत्वमाशु गच्छति सान்वयः ॥

"எந்தப்பிராம்மணனாவது, க்ஷத்ரியனாவது வைசியனாவது வேதத்தை அத்தியயனம் செய்யாமல் வேறு வித்யைகளில் சிரமப்படுகிறானோ! அவன் ஜீவித்திருக்கும் பொழுது தன்வம்சத்துடனே சூத்திரனாய் விடுகிறான்" என்று மனுஸ்மிருதி, 2-வது அத்தியாயம், 168-வது சுலோகத்தில் கூறப்படுகின்றது. இதுபிறப்பினாலேயே ஜாதியை ஒப்புக்கொள்ளுவதானால் எங்ஙனம் பொருந்தும்?

(7) மேலும் ஒவ்வொருபுராணத்தையும் வாசித்துப்பார்க்கும் பொழுது வியாஸபகவானொருவரே அவைகளை எழுதினாரென்று நினைக்க இடமில்லை. ஏனெனில் ஒரு புராணம் மற்றொரு புராணத்தை நிந்தித்து எழுதப்பட்டிருக்கிறது. ஒன்றைவிட ஒன்று ரொம்பவும் விசேஷமுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரியவருகிறதென்றால் இந்த புராணங்கள் யாவும் ஒருவரால் எழுதப்படவில்லை. அப்படி எழுதப்பட்டிருக்கும்பக்ஷத்தில் ஒரேஸித்தாந்தத்துடனே ஏதோ ஒரு விஷயத்தை உசிதமாக எடுத்துரைக்கும். இந்த புராணங்கள் யாவும் அனேகமாய் சுயநலம் கருதும் முன்காலத்திய பிராமணர்களால் எழுதப்பட்டவைகளென்றே கண்டிப்பாயுரைக்கலாம். பெரிய பூஜைக்கு அர்ஹராகிய முனீசுவரர் வியாஸர் இப்படி பலவிதமான கல்பிதக் கட்டுக்கதைகளை எழுதுவாரா? அப்படிப்பட்ட கட்டுக்கதைகளையும் அநீதியான விஷயங்களையும் எழுதுகிறவரை என் தபஸ்வியென்றும், முனீசுவரரென்றும், சிலாக்கிய புருஷர் என்றும் சொல்லவேண்டும்.

(8) அன்றியும் புராணங்கள் பல விஷயங்களில் வேதத்திற்கு விரோதப்படுகின்றன. அதாவது— வேதத்தில் கூறப்படும் ஸிருஷ்டிக்கிரமத்திற்கும் புராணத்தில் கூறப்படுகின்ற ஸிருஷ்டிக் கிரமத்திற்கும் விரோதம் காணப்படுகின்றது. வேதஸிருஷ்டி ஸத்யஞானத்திற்கு அநுகூலமாயிருக்கின்றது. புராணஸிருஷ்டியோ மானிடர்களின் அனேகவிதமான புத்திவிசேஷத்திற்கு

அனுகூலமாயிருக்கின்றது. இதனால் வேதத்திற்குப் பிரதிகூலமாகவுமிருக்கிறது.

(9) வேதம் ஈசுவரன் ஒருவரென்றும் அவரொருவருக்குத்தான் பூஜை செய்யவேண்டுமென்றும் கட்டளையிடுகிறது. புராணத்திலோ அனேகவிதமான தேவதைகளையும் விருக்ஷங்களையும் பூஜிக்கவேண்டுமென்று சொல்லப்படுகின்றது.

(10) ஞானத்தினாலேதான் முக்தி அடையக்கூடுமென்று வேதம் தெரிவிக்கிறது. புராணமோவெனில்— ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீராமன், ஸாளிக்கிராமம், கங்கை இவைகளின் பெயரைச்சொன்னதினாலேயே முக்தி அடையலாமென்று சொல்லுகிறது.

(11) அநித்தியமான சரீரத்தைவிட்டு இந்த ஜீவன் போன பிறகு கர்மானுஸாரமாக மறுஜன்மமெடுக்கிறான். அந்த கர்மம் அந்த ஜன்மத்தில் பலனைக்கொடுத்துவிட்டு அதோடு போகிறது. வேறுகர்மத்தால் வேறு சரீரம் வருகிறது. அதன் பயன் அந்த ஜன்மத்தில் அனுபவித்துத் தீர்க்கப்படுகிறது. இவ்வாறு அவனவன் செய்த கர்மபலன் அவனவனுக்கு நேருகிறது என்று வேதம் கூறுகின்றது. புராணத்திலோ அவரவர்களுடைய புத்திரபௌத்திரர்கள் கயை முதலிய க்ஷேத்திரங்களில் கொடுக்கின்ற பிண்டதானாதிகளால் பிதிருக்களுக்குத் திருப்தியுண்டாவதாகக் கூறப்படுகின்றது.

(12) புருஷர்களும் ஸ்திரீகளும் வேதத்தைப்படிக்க வேதம் உத்திரவு கொடுக்கிறது. புராணமோவெனில் ஸ்திரீகளை சூத்திரர்களுக்கொப்பாக்கி வேதத்தைப்படிக்க அவர்களுக்கு அதிகாரம் கிடையாதென்று சொல்லுகிறது. அதாவது தேவீபாகவதம் 1-வது ஸ்கந்தம் 3-வது அத்தியாயத்தில்

स्त्रीशूद्रद्विजबन्धूनां त्रयी न श्रुतिगोचरा ।
कर्मश्रेयसि मूडानां श्रेय एवं भवेदिति ॥ (25)
इतिभारतमाख्यानं कृपया मुनिनाकृतम् ।
वेदार्थं च समुद्धृत्य भारते प्रोक्तवान् मुनिः ॥ ॥26॥

"ஸ்திரீகள், சூத்திரர்கள், துவிஜபந்துக்கள் இவர்களுக்கு வேதம் காதில் விழக்கூடாது. வேதப்படிப்பில்லாமல் மூடர்களான இவர்களுக்கு இவ்விதம் செய்தால் சிரேயஸ்ஸு உண்டாகும் என்று

கிருபையால் வியாஸமுனிவரால் பாரதம் செய்யப்பட்டது. அந்த பாரதத்தில் வியாஸபகவான் ஸகல வேதார்த்தங்களையுமெடுத்துக் கூறியிருக்கின்றார்" என்று சொல்லப்படுகின்றது. இது வேத விரோதமானது, யுக்திக்கும் விரோதமானது. அதாவது எல்லோருக்கும் பிதாவாகிய ஸர்வேச்வரன் தன்னுடைய புத்திரர்களுக்கொப்பான ஜீவராசிகளுக்கு அன்னஆஹாராதிகளை யளிக்கும் பொருட்டு எல்லாவற்றிற்கும் பொதுவாக அனேக வஸ்துக்களைப் படைத்திருக்கிறார். அதாவது காற்று, ஜலம், பூமி, சூரியன், சந்திரன் முதலியவைகளை விருஷ்டித்திருக்கிறார். இவைகள் எல்லோருக்கும் பொதுவாயுள்ளவைகளாதலால் இவைகளினால் எற்படும் நன்மையை எல்லோரும் எப்படி பொதுவாகப் பங்கிட்டுக் கொண்டு பாகத்தையடைகிறார்களோ! அவரவர்களுடைய புத்தி சக்திக்கனுஸாரமாக அனுபவிக்கிறார்களோ! அதேமாதிரிசப்தவடிவமான வேதம் எல்லோருக்கும் பொதுவானது. ஆகவே அதை புருஷர்கள் ஸ்திரீகள் மற்றவர்கள் எல்லோரும் படிக்கலாமென்பதில் என்ன ஆக்ஷேபணையிருக்கின்றது. அன்றியும் ஸ்திரீகள் வேதவாக்கியத்தைக் கேட்க அர்ஹதையுள்ளவர்களல்லவென்று நிர்ணயம் செய்துவிடமுடியாது. எனெனில் ஸ்திரீகளுக்கும் விருதம் முதலிய விசேஷங்கள் விதிக்கப்படுகின்றன. அதற்கு அங்கமாகிய மந்திரங்களையுச்சாரணம் செய்ய அவர்களுக்கு எப்படி அதிகாரமில்லாமற்போகும் ? அதிகாரமிருப்பதாகவேதான் ஒப்புக்கொள்ளவேண்டும். மந்திரங்களை சுத்தமாகவும் ஸ்பஷ்டமாகவும் உச்சரிக்க ஸ்திரீகளுக்கு முடியாதேயெனில் புருஷர்களுக்குப் போல் ஸ்திரீகளுக்கும் அந்தசக்தியை உண்டுபண்ணவேண்டியது தான். வியாகரணாதிகளைக் கற்பித்து மந்திரங்களை சுத்தமாகவும் ஸ்பஷ்டமாகவும் உச்சரிக்கும்படி செய்யக்கூடும். ஸ்திரீஜன்மம் ஸாமான்யமென்று நினைத்துவிடவேண்டாம். புராணங்களில் விசேஷபுருஷனுகவும் முக்கியஈசனுகவும் அறிவிக்கப்பட்டவிஷ்ணு பகவானே ஸ்திரீஉருவம் பூண்டதாகவும் தெரிகிறது. ஆகவே ஸ்திரீஜன்மம் சிறந்ததாகையால் அவர்களுக்கு வேதம் படிக்க அதிகாரமுண்டெனச் சொல்லுவது தகும். மேலும் யக்ஞம்முதலிய விசேஷகர்மாக்கள் செய்யப்படவேண்டுமானுல் ஸ்திரீகள் கூடவேயிருக்கவேண்டும். ஸ்திரீகளை விவாஹம் செய்துகொள்ளாதவர்களுக்கு யக்ஞத்தில் அதிகாரமே கிடையாது. அந்த யக்

னும்செய்யும்பொழுது ஸ்திரீகளும் கூடவேயிருக்கிறார்களல்லவா? அப்படி அவர்கள் கூடயிருக்கமுடியாமற்போனல் வேறு அனேக விதமான உபாயங்களால் ஸ்திரீரூபத்தைச்செய்து கூடவைத்துக் கொண்டே யக்ஞங்களைப் பூர்த்திசெய்திருப்பதாக அனேக கதைகளிலிருந்து தெரிகிறது. அப்படி யக்ஞங்களைச்செய்யும்பொழுது அவசியமிருக்கவேண்டுமென்று ஏற்படும்பொழுது கூடவேயிருக்கும் ஸ்திரீகள் மந்திரங்களைக் கேட்டிருக்கமாட்டார்களா? ஆகவே வேதம் ஸ்திரீகள் காதில் விழக்கூடாதென்பது சரியல்லவென்று ஏற்படுகிறதல்லவா? பத்மபுராணம் ஸிருஷ்டிகாண்டம் 16-வது அத்தியாயம் பார்க்கவும்.

(13) வேதத்தில் ப்ரம்மசாரி, கிரஹஸ்தன், வானப்பிரஸ்தன், ஸன்னியாஸி என்று நான்கு ஆசிரமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொரு ஆசிரமஸ்தரும் எப்படி நடந்து கொள்ளவேண்டியதென்ற விசேஷமும் அததன் காலவரையும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. புராணத்திலும் இந்த நான்கு ஆசிரமங்கள் போதிக்கப்பட்டிருப்பினும் "अष्टवर्षा भवेद्गौरी" என்பதாதி வசனங்களால் சிறியவயதிலேயே கலியாணத்தைச்செய்து வைக்கவேண்டுமென்று விதிக்கப்படுவதிலிருந்து ஆணிவேர்போல் மூலாதாரமான ப்ரம்மசாரியாசிரமமே கெடுக்கப்பட்டுவிடுகிறது. முதலாவது ஆச்ரமம் கெட்டதனாலேயே மற்ற மூன்று ஆசிரமங்களுடைய நிலைமையும் கெட்டுப்போகிறது. ஆகவே ஒரு ஆசிரம ஸ்வரூபம் தெரியாமலே போய்விடும்படி ஏற்பட்டுவிடுகிறது.

(14) சிறுவயதில் கல்லியாணம் செய்யும் வழக்கமானது ஸமீபகாலத்திலிருந்துதான் ஏற்பட்டதென்று நிச்சயமாகக் கூறலாம். மேலும் இந்தமாதிரியான ஆசாரணை மிலேச்சர்களாகியமுகம்மதியர்கள் இந்த தேசத்தைக் கைப்பற்றியபிறகே ஏற்பட்டது. அவர்கள் விவாஹமாகாத பெண்களை பலாத்காரமாக அபஹரித்துக்கொண்டுபோனபடியாலும் அந்த ஸமயத்தில் மிலேச்சர்கள் இந்துதேசத்தை ஆண்டுகொண்டிருந்தபடியினாலும் நம்ஆர்யர்கள் பயத்தினால் யோசித்துப்பார்த்து அந்தமாதிரியானவழக்கத்திற்கு கொண்டுவந்தார்களென்றும், அதற்குப்பிறகுதான் புராணங்கள் எழுதப்பட்டனவென்றும் ஸித்திக்கிறது.

வேதத்தில் ப்ர்ம்மசர்யாச்ரமத்தில் பூர்ணவித்தையைக்கற்று அதன் பிறகே குண, கர்ம, சுபாவத்தை ஒட்டி விவாகம் செய்ய

வேண்டுமென்று சிக்ஷை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் புராணத்தில் கும்பம், மீனம், திதி, லக்னாதிகளையும், குரு செவ்வாய், புதன் இவைகளைப்பார்த்து செய்யவும் சொல்லப்படுகிறது.

15. வேதத்தில் தினந்தோறும் பஞ்சமஹாயக்ஞம் செய்யும் படிக்கு சொல்லப்பட்டிருக்கிறது. புராணத்திலோ அனேக விதமான ஸ்வகபோலகல்பிதமந்திரங்களை ஜபம்செய்யவும்விதம்விதமான பூஜைசெய்யவும் கூறப்பட்டிருக்கிறது. ஒரு வருடத்திற்கு 365-நாட்கள் உண்டு. ஆனால் விரதமும் பூஜையும் குறைந்தது 450-நாள் வரையில் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றைப் பார்க்க ஒன்று ரொம்பவும் விசேஷமாகத் தெரிவிக்கவும் செய்திருக்கிறது.

(16)வேதத்திலோ பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் இம்மூன்றுபேருக்கும் ஒரே காயத்ரீ உபதேசம் செய்ய சிக்ஷை கூறப்பட்டிருக்கிறது. புராணமோ 3-க்கு மேற்பட்டு 24-வரை அனேகவிதமான விசித்திரமான மந்திரங்களை உச்சாரணம் செய்யவும், உறைத்திருக்கிறது.

17. வேதத்தில் குண, கர்ம, சுபாவத்தை ஒட்டியே நான்கு வருணங்களை மதிக்கவேணுமென்று கூறப்படுகிறது. புராணத்திலோ மேற்கண்டபடி சொன்னபோதிலும் ஜன்மத்தினாலேயும் உறைக்கலாமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. புராணத்தில் சொல்லியிருக்கிறது உண்மையென்றே எடுத்துக்கொள்ளுவோமாகில் கீழே உரைக்கப்பட்ட வாக்கியமானது உண்மையல்லவென்று தீர்மானம் செய்யக்கூடுமா ?

जन्मना जायते शूद्रः संस्कारेण द्विजोत्तमाः ।
वेदपाठात् भवेत्विप्रः ब्रह्मजानाति ब्रह्मगाः ॥ (9)

"பிறப்பால் சூத்திரனாகவும், ஸம்ஸ்காரத்தினால் துவிஜனாகவும், வேதபாடத்தால் விப்பிரனாகவும், ப்ரம்மஞானத்தால் பிராம்மணனாகவும் ஆகிறான்" என்ற வசனம் பிரமாணமில்லையா ?

மேலும் புராணத்தையே உண்மையென்றும் கீழ்கண்ட காரணத்தினால் எடுத்து தீர்மானிக்கவும் கூடவில்லை. நாம் தற்காலம் புகழ்ந்துகொள்ளும் அனேக ரிஷிகளும் முனிகளும் ரொம்பவும் தாழ்ந்த ஜாதியல் ஜன்மம் எடுத்ததாக புராணமே கூறுகின்றது. உதாரணமாக வியாஸர் என்பவர் எங்கே யார் வயற்றில் பிறந்தார்,

அவருடைய தாயார் யாவர் என்பதை நோக்கில் நன்கு விளங்கும். எந்த மகானால் எழுதப்பட்ட புராணத்தை ரொம்பவும் வெகுமானத்துடன் (ஆனால் புராணத்தை அவர் எழுதவில்லையென்றும் மேலே ருசுப்படுத்தியாய்விட்டது) மதிக்கிறீர்களோ! அவருடைய தாயார் யாவர்? மேலும் இந்த மேலே கண்ட மகாபுருஷர் 4-வேதத்தைப் பகுத்தும் 17-புராணங்களையும் எழுதியும் மனத்திற்கு சாந்தியேற்படாமல் பாகவதமாகிய 18-வது புராணத்தை எழுதினதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது நம்பத்தக்கதா?

18. இரண்டாவது, நாம் யாவரும் நீதியில் சிறந்ததாகவும் ரொம்பவும் விலைமதிக்கக்கூடாத அவ்வளவு நல்ல ஞானத்தை புகட்டக்கூடியதாகவுமுள்ள விதுரநீதி யாரால் எழுதப்பட்டது என்பதை விசாரிப்போம். அந்த விதுரர் யாருடைய குமாரர். தாசியின் புத்திரரால் எழுதப்பட்ட புஸ்தகத்தை ரொம்பவும்மேன்மையாகப் பாராட்டுகிறோம். இது விஷயம் ராமாயணம் அயோத்தியா காண்டம் சர்க்கம் 63-லும், சாந்தோக்கிய உபநிஷத் பிரபாடகம் 4, கண் 2 லுள்ள வாக்கியத்தைப் பார்க்கவும். மூன்றாவது, ஜானசுருதியை ரைக்குவர் என்னும் மகரிஷிப்படிப்பித்தார். மேலும் நான்காவது- சாந்தோக்ய உபநிஷத் பிரபாடக 4-கண்-4 மே ஜாபாலனென்று மூர்க்ககுலத்தோனுக்கு கௌதம ரிஷி படிப்பித்தாரென்றும் தெரிவிக்கிறது. இது விஷயம் ருக்வேத மண்டல 10, அனுவாக 3, ஸ்கந்தம் 30-34, வரையில் பார்க்கவும் மேலும் சதபதத்தில் காண்டம் 1, பிரபாடகம் 1, அத்தியாயம் 1 லும் பிரபாடகம் 4, கண்டம் 12 லும் விவரமாகவும் நாலு வருணத்தாருக்கும் வேதமந்திரத்தினால் யக்ஞங்கள் செய்து காற்றை சுத்திசெய்யவும் சிக்ஷைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவுமன்னியில் மஹாபாரதம் சாந்திபர்வம் அத்தியாயம் 327-வேதவ்யாசர் சுக்ராசாரியர், இந்தப் பெரிய மஹான்கள் யாவரும் தங்களுடைய சிஷ்யர்களை யாவருக்கும் கீழ்கண்டபடி உத்தரவு அளித்தாரென்று தெரியவருகிறது.

वेदस्याध्ययनं हीदं तच्च कार्यं महत्स्मृतम् । ॥४६॥
विद्यार्थी ब्रह्मचारी स्यात् सर्वेषां पालने गृही ॥ ॥४८॥

இந்த வசனத்தைக் கவனிக்கவும். (தொடரும்) சுந்தரேசசர்மா,
பம்பாய்.